பதிப்புரிமை ஆசிரியருக்கே / All Rights to Author

# தமிழ்வழி பரீட்சைகள்

## முதலாம் தவணைப் பரீட்சை - மாதிரி வினாத்தாள்
## First Term Examination - Model Paper

தரம் 06

தமிழ் மொழியும் இலக்கியமும் I,II
Tamil Language and Literature I,II

இரண்டு மணித்தியாலம்
Two hours

ஆசிரியர்: ஏ.கஜன் B.A Tamil
077 2400 707 / 076 8044 959
மல்லாவிக் கஜன் (ஆதித்தியன்)
Group e.way தமிழ்வழி

தமிழ் இனிது கல்வி நிலையம்
பாலிநகர், வவுனிக்குளம்
புவியியல் ACCOUNTING WORLD
2ஆம் குறுக்கு வீதி, மல்லாவி
புவியியல், தமிழ் பிரத்தியேக வகுப்புக்கள்

சுட்டெண்: ..............................................

**அறிவுறுத்தல்கள்:**

- இவ் வினாத்தாள் **இரண்டு** பகுதிகளைக் கொண்டது. **பகுதி I, 20** பல்தேர்வு வினாக்களைக் கொண்டுள்ளது. **பகுதி I** இற்கான விடைகள் இவ் வினாத்தாளிலேயே எழுதப்படுதல் வேண்டும். ஒவ்வொரு சரியான விடைக்கும் **இரண்டு** புள்ளிகள் வீதம் வழங்கப்படும்.
- **பென்சிலால் எழுதப்படும் விடைகளுக்குப் புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.**
- அறிவுறுத்தலுக்கு அமைவாகப் **பகுதி II** வினாக்களுக்கு விடையளிக்குக.

| | |
|---|---|
| பகுதி I மொத்தப் புள்ளிகள் | |
| பகுதி II மொத்தப் புள்ளிகள் | |
| இறுதிப் புள்ளிகள் | 100 |

## பகுதி / Part - I

**01. 1 – 20 வரையான ஒவ்வொரு வினாக்களிலும் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்து, அதன் கீழ்க் கோடிடுக.**

**1.** “எனக்கும் அப்படி விதைக்க ஆசைதான்” - இங்கு **ஆசை** என்பதன் எதிர்க்கருத்துச் சொல்.
(1) பேராசை (2) அவா (3) விருப்பம் (4) நிராசை

**2.** “அறியாது செய்ததால் வந்ததே தீது” - இங்கு **தீது** என்பதன் ஒத்த சொல்
(1) இன்பம் (2) தீமை (3) நன்மை (4) மகிழ்ச்சி

**3.** “கருங்குளவிக் கூட்டை ஒரு ஆண் குரங்கு கண்டது” – பின்வருவனவற்றுள், குரங்கின் **பெண்**ணைக் குறிக்கும் சொல்.
(1) கடுவன் (2) குருளை (3) மந்தி (4) பெட்டை

**4.** “தவலையைப் பிடித்தேன் தவலையைப் பிடித்தேன்…”- இங்கு **தவலை** எனப்படுவது.
(1) ஊர்வன (2) நீர் (3) குடம் (4) பழம்

**5.** கலை நிகழ்வுகளை மேடையேற்ற முன்னர், அவற்றை நிகழ்த்திப் பார்த்தல் எவ்வாறு அழைக்கப்படும்?
(1) ஒப்பனை (2) ஒத்திகை (3) ஒற்றி (4) கால்கோள்

**6.** ஐயோ! பாவம்! இவன் நல்லவன் ஆயிற்றே! - இவ் வாக்கியத்தில் பயன்படுத்தப்பட்டுள்ள நிறுத்தற் குறியீடு.
(1) வியப்புக்குறி (2) வினாக்குறி (3) காற்புள்ளி (4) முற்றுப்புள்ளி

**7.** வரை, வறை என்பவற்றின் பொருள்கள் **முறையே.**
(1) கீறு, மலை (2) வறுவல், கீறு
(3) மலை, வறுவல் (4) மலை, குற்றம்



தமிழ்வழி பரீட்சைகள் தமிழ்வழி பரீட்சைகள் தமிழ்வழி பரீட்சைகள்

**8.** பின்வருவனவற்றுள் குறில் எழுத்துக்களைக் **கொண்டிராத** விடைத்தொகுதி.
(1) அ, இ (2) உ, எ (3) ஐ, ஔ (4) எ, ஒ

**9.** "பாரதியார் சிறந்த புலவர்" - இங்கு **புலவர்** என்பது.
(1) எழுவாய் (2) பயனிலை (3) செயப்படுபொருள் (4) அடைமொழி

**10.** "உங்கள் வீட்டிற்கு நாங்கள் வருகின்றோம்" - இங்கு '**நாங்கள் வருகின்றோம்**' என்பது.
(1) படர்க்கைப் பன்மை (2) தன்மை ஒருமை
(3) முன்னிலைப் பன்மை (4) தன்மைப் பன்மை

**11.** "தம்பி, நீரை மட மடவெனக் குடித்தான்" - இங்கு '**மட மட**' என்பது.
(1) இரட்டை மொழி (2) அடுக்கிடுக்கு மொழி
(3) அடுக்கு மொழி (4) இணைமொழி

**12.** பின்வருவனவற்றுள், எதிர்காலத்தைக் குறிக்கும் வினைச் சொல்லாக **அமைவது.**
(1) பறக்கும் (2) நடந்தான் (3) செய்கிறான் (4) படித்தாள்

**13.** பின்வருனவற்றுள் **வினைமுற்று**.
(1) வந்து (2) நடந்தார் (3) மலர் (4) செய்து

**14.** "பறவைகள் பலவிதம்" என்ற பாடப் பகுதியை எழுதியவர்.
(1) அழ. வள்ளியப்பா (2) சோமசுந்தரப் புலவர்
(3) கோகிலா மகேந்திரன் (4) பேராசிரியர் சோதி

**15.** தமிழ் நெடுங்கணக்கிலுள்ள **மொத்த எழுத்து**க்களின் எண்ணிக்கை.
(1) 216 (2) 247 (3) 246 (4) 07

**16.** **அக்கா** - என்ற சொல் உணர்த்தும் இலக்கணக்கூறு.
(1) அஃறிணை, பெண்பால், பன்மை (2) உயர்திணை, பெண்பால், ஒருமை
(3) உயர்திணை, பெண்பால், பன்மை (4) அஃறிணை, பெண்பால், ஒருமை

**17.** மாணவர்களோடு சேர்ந்து ஆசிரியரும் சிரமதானத்தில்**…………………**
(1) ஈடுபட்டனர். (2) ஈடுபடுவர்.
(3) ஈடுபட்டார்கள். (4) ஈடுபட்டார்.

**18.** அதிக சொத்துக்களைத் தன்வசம் வைத்திருப்பவன்.
(1) உலோபி (2) கஞ்சன் (3) பெருஞ்செல்வன் (4) கருமி

**19.** பின்வருவனவற்றுள் **அனல்** என்ற சொல்லுக்கு நிகராக **வழங்க முடியாத** ஒரு சொல்.
(1) தண்மை (2) நெருப்பு (3) தீ (4) தழல்

**20.** "**………………...** காரணமாகப் பயிர்கள் எல்லாம் நாசமாகின." - இடைவெளியில் **வரக்கூடிய** சொல்.
(1) வெல்லம் (2) வெள்ளம் (3) வெழ்ளம் (4) வெழ்ழம்

**(20 X 2 = 40 புள்ளிகள்)**

## பகுதி / Part – II

**02. பின்வருவனவற்றுள் ஒன்றைத் தெரிவு செய்து, 100 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**
(அ) முயற்சி திருவினையாக்கும்
(ஆ) தொற்று நோய்களிலிருந்து விடுபடுவோம்
(இ) தாய்மொழியின் சிறப்பு
(ஈ) நான் இரசித்த மழை நாள் **(20 புள்ளிகள்)**

**03.** எதிர்வரும் மாதம் நடைபெறவுள்ள உமது பிறந்தநாள் நிகழ்விற்கு, வெளியூரிலுள்ள உமது நண்பன் **அல்லது** நண்பியை வருகை தருமாறு அழைத்து, **50** சொற்களுக்குக் குறையாமல் ஒரு **கடிதம்** எழுதுக.
**(10 புள்ளிகள்)**


தமிழ்வழி பரீட்சைகள் தமிழ்வழி பரீட்சைகள் தமிழ்வழி பரீட்சைகள் தமிழ்வழி பரீட்சைகள்

**04. பின்வரும் வினாக்களுக்குச் சுருக்கமான விடை தருக.**

(i) சேவலின் தோற்றப் பொலிவு பற்றிச் சேய் எலி கூறியது யாது?
(ii) 'எழுவாய்' என்றால் என்ன?
(iii) நாயினுடைய திட்டம் யாதாகவிருந்தது?
(iv) 'வல்லின மெய்' எழுத்துக்கள் யாவை?
(v) ஊர் மக்களிடமிருந்து ஈ.்.பண்டி எவற்றைப் பெற்றுக்கொண்டான்?
(vi) குரங்கின் சேட்டைக்குக் கிட்டிய பரிசு என்ன?
(vii) 'வாக்கியம்' என்றால் என்ன?
(viii) 'சரிவிகித உணவு' என்பதன் மூலம் நீர் விளங்கிக்கொள்வது யாது?
(ix) 'மூவிடப் பெயர்கள்' யாவை?
(x) மோவாஸ் பறவையின் முட்டை ஓடு எதற்குப் பயன்படுகின்றது?

**(20 புள்ளிகள்)**

**05. பின்வரும் சொற்களை வைத்துப் பொருள் புலப்படுமாறு வாக்கியம் அமைக்குக.**

(i) புனை
(ii) இரை
(iii) கணை
(iv) அரண்
(v) மணம்

**(10 புள்ளிகள்)**

## பகுதி I விடைகள்

| வினா இல | விடை இல | வினா இல | விடை இல |
|---|---|---|---|
| 1 | 4 | 11 | 1 |
| 2 | 2 | 12 | 1 |
| 3 | 3 | 13 | 2 |
| 4 | 3 | 14 | 3 |
| 5 | 2 | 15 | 2 |
| 6 | 1 | 16 | 2 |
| 7 | 3 | 17 | 4 |
| 8 | 3 | 18 | 3 |
| 9 | 2 | 19 | 1 |
| 10 | 4 | 20 | 2 |



தமிழ்வழி பரீட்சைகள் தமிழ்வழி பரீட்சைகள் தமிழ்வழி பரீட்சைகள் தமிழ்வழி பரீட்சைகள் தமிழ்வழி பரீட்சைகள் தமிழ்வழி பரீட்சைகள் தமிழ்வழி பரீட்சைகள் தமிழ்வழி பரீட்சைகள் தமிழ்வழி பரீட்சைகள் தமிழ்வழி பரீட்சைகள்
தமிழ்வழி பரீட்சைகள் தமிழ்வழி பரீட்சைகள் தமிழ்வழி பரீட்சைகள் தமிழ்வழி பரீட்சைகள் தமிழ்வழி பரீட்சைகள் தமிழ்வழி பரீட்சைகள் தமிழ்வழி பரீட்சைகள் தமிழ்வழி பரீட்சைகள் தமிழ்வழி பரீட்சைகள் தமிழ்வழி பரீட்சைகள்
தமிழ்வழி பரீட்சைகள் தமிழ்வழி பரீட்சைகள் தமிழ்வழி பரீட்சைகள் தமிழ்வழி பரீட்சைகள் தமிழ்வழி பரீட்சைகள் தமிழ்வழி பரீட்சைகள் தமிழ்வழி பரீட்சைகள் தமிழ்வழி பரீட்சைகள் தமிழ்வழி பரீட்சைகள் தமிழ்வழி பரீட்சைகள்